*மக்கள் ஆய்வகம்*

*வழங்கும்*

# ஜெயலலிதா ஆட்சியில் இல்லாத தமிழகம்
# ஆறு மாத மோடி அரசு
# மாநில அளவிலான ஆய்வு முடிவுகள்
# &
# திருவரங்கம்: இடைத்தேர்தல் களம்
# ஒரு முன்னோட்டம்

*கள ஆய்வு நடந்த நாள்கள்:*
2014 நவம்பர் 07-20

*ஊடகவியலார் சந்திப்பு:*
22 நவம்பர் 2014

*இடம்:*
சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002

மக்கள் ஆய்வகம் வழங்கும்

# ஜெயலலிதா ஆட்சியில் இல்லாத தமிழகம்

## மாநில அளவிலான ஆய்வு முடிவுகள்

### *ஆய்வகப் பின்னணி*

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கையுடன் மக்களை மையப்படுத்திய பல்துறை ஆய்வுகளையும் பரப்புரைகளையும் பயிலரங்குகளையும் மக்கள் ஆய்வகம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மக்களின் உள்ளக் கிடக்கையை ஆய்வுப்பூர்வமாக அறிந்து, செயல்பூர்வமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியில், 2001 ஜனவரி தொடங்கி இதுவரை தமிழகம்-புதுவை மற்றும் தென்னிந்திய அளவில் 25-க்கும் மேற்பட்ட சுற்றுகளில் ஒரு லட்சம் கி.மீ.க்கு மேல் பயணம் செய்து பண்பாடு-அரசியல் தொடர்பான பேராய்வுகளை நடத்தியுள்ளது. நகரை மையமாகக் கொண்டு சமீபகாலம்வரை செயல்பட்டு வந்த மக்கள் ஆய்வகம் கிராமப்புற இளைஞர், சிறார் மற்றும் மகளிரின் திறமைகளையும் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்க்கும் நோக்கில் கிராமிய ஆய்வு - பயிற்சி மையம் ஒன்றைக் கடந்த ஓராண்டாக நடத்திவருகிறது.

### *ஆய்வு அணுகுமுறை*

இந்திய அளவில் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்த, வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த வழக்கில் முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்குச் சிறப்பு நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்ட நிலையில், தமிழக அரசியல் களத்தில் அதன் தாக்கங்களை ஆராயவும், பதவியேற்று ஆறு மாதங்களை நிறைவுசெய்துவிட்ட மோடி தலைமையிலான நடுவணரசின் செயல்பாடுகளைத் தமிழக மக்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை அறியவும், ஜெயலலிதா பதவி நீக்கம் செய்யப் பட்டதால் காலியாகியுள்ள திருவரங்கம் தொகுதி இடைத்தேர்தல் கள நிலவரம் குறித்த ஒரு முன்னோட்டமாகவும் மாநில அளவிலான ஆய்வை மக்கள் ஆய்வகம் மேற்கொண்டது.

தமிழகத்தின் அனைத்து நாடாளுமன்றத் தொகுதிகளிலும், நவம்பர் 07 முதல் 20 முடிய, பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில் நடைபெற்ற இந்த ஆய்வில், மாநில அளவில் 3320 பேரிடமும், திருவரங்கம் தொகுதியில் 1530 பேரிடமும் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன.

தமிழ்ப் பண்பாடு-அரசியல் சூழலுக்கேற்ப, எண்ணியல் (quantitative) மற்றும் பண்பியல் (qualitative) கூறுகளை உள்ளடக்கி, பேரா. டாக்டர் ராஜநாயகம் உருவாக்கியுள்ள *சமூக-உளவியல் அணுகுமுறை* (social-psychological approach) இந்த ஆய்விலும் பின்பற்றப்பட்டது.

### *பங்கேற்றோர் பின்னணி*

ஆண்களும் பெண்களும் ஏறத்தாழச் சம அளவில் பங்கேற்ற மாநில அளவிலான ஆய்வில் *வயதுரீதியாக,* வயது 20 வரை - 6, வயது 21 முதல் 30 வரை - 35, வயது 31 முதல் 45 வரை - 36, வயது 46 முதல் 60 வரை - 19 (மீதி - வயது 60-க்கு மேல்). *கல்விரீதியாக,* வகுப்பு 6 முதல் 12 வரை - 49, கல்லூரி அல்லது தொழிற்கல்வி - 37 (மீதி படிக்காதவர்கள் மற்றும் ஆரம்பக் கல்விவரை படித்துள்ளவர்கள்). *தொழில்ரீதியாக,* கணிசமான அளவினர் சிறிய அளவில் சொந்தத் தொழில் செய்வோர் (30) மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் (28). பிறரில்: கூலி வேலை / விவசாயம் செய்வோர் - 14, மாணவர்கள் - 10, அரசு ஊழியர் - 7 (மீதி - பிற தொழில்கள்). *சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 22, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 23, பிற்படுத்தப்பட்டோர் - 42 (மீதி - பிற (உயர்) சாதியினர் மற்றும் தகவல்தர விரும்பாதவர்கள்). *மதரீதியாக,* மிகப்பெரும்பான்மையோர் (85) இந்துக்கள். இஸ்லாமியர் - 7, கிறித்தவர் - 6.

## *ஆய்வு முடிவுகள்*

***(1) எதிர்பார்த்த வெற்றியா?*** கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழக அளவில் அதிமுக பெற்ற பெரும் வெற்றி பெரும்பாலோர் எதிர்பார்ப்பிற்கு இணங்கவே அமைந்துள்ளது.

| | |
|---|---|
| இந்தளவு பெரும் வெற்றி எதிர்பார்த்ததே | 42 |
| வெற்றி எதிர்பார்த்தது, ஆனால் இந்த அளவுக்கில்லை | 22 |
| முற்றிலும் எதிர்பார்க்காதது | 16 |

***(2) வெற்றிக்கான காரணங்கள்:*** அதிமுக பெற்ற வெற்றிக்கான முக்கிய காரணங்களில் முதலிடத்தில், பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தியதன் மூலம் “அம்மா”வுக்கு ஆதரவான அலை வீசியது சுட்டிக் காட்டப்படுகிறது.

| | |
|---|---|
| நலத்திட்டங்களால் ஜெயலலிதாவுக்கு ஆதரவான அலை | 28 |
| பிரதமர் வேட்பாளராகும் / மைய அரசில் முக்கிய பங்கு வகிக்கும் சாத்தியம் | 23 |
| தேர்தல் ஆணையத்தின் மறைமுக ஆதரவும் பண விநியோகமும் | 21 |
| திமுக மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் | 18 |

***(3) எதிர்பாராத தண்டனை:*** *ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில், கர்நாடக சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு தாங்கள் எதிர்பார்த்ததை விடக் கடுமையானதாக அமைந்திருந்ததாகப் பாதிக்கும் மேற்பட்டோர் தெரிவித்துள்ளனர்.*

| | |
|---|---|
| *எதிர்பார்த்ததைவிடக் கடுமையான தண்டனை* | *53* |
| *தண்டனை எதிர்பார்த்ததுதான்* | *14* |
| *முற்றிலும் எதிர்பாராதது* | *30* |

***(4) தீர்ப்பு குறித்த மக்கள் தீர்ப்பு:*** *சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பு குறித்து மக்கள் தெரிவித்துள்ள கருத்துக்களில், “சட்டம் தன் கடமையைச் செய்துள்ளது” என்ற கருத்து மிக உறுதியாக (72) முன்வைக்கப்பட்டுள்ளது. குற்றச்சாட்டின் தன்மைக்கும் தண்டனையின் கடுமைக்கும் பொருத்தமில்லை என்பதால் இது ஏதோ காழ்ப்புணர்ச்சியோடு வழங்கப்பட்ட தீர்ப்பு போலத் தெரிகிறது (11), இத் தீர்ப்பு ஏற்கத்தக்கதல்ல, இது பொய் வழக்கு என்பதால் இதை அப்போதே தள்ளுபடி செய்திருக்க வேண்டும் (9), எல்லா அரசியல்வாதிகள் மீதும் இத்தகைய குற்றச்சாட்டைச் சுமத்த முடியும் என்பதால், தப்பே நடந்திருந்தாலும் எச்சரித்து / மன்னித்து விட்டிருக்கலாம் (5) ஆகியவை பிற கருத்துக்கள்.*

***(5) ஜாமீன் மறுப்பும் வழங்கலும்:*** *கர்நாடக உயர்நீதிமன்றம் மறுத்த ஜாமீனை உச்சநீதிமன்றம் வழங்கியது சட்ட நடைமுறையின்படி நடந்துள்ள விஷயமாகப் பாதிக்கும் மேற்பட்டோர் (54) கருதுகின்றனர். இதன் மூலம் உயர்நீதிமன்றத்தின் உள்நோக்கம் அம்பலமாகியுள்ளது (15), நீதித்துறையில் மாற்றம் செய்யவேண்டிய அவசியத்தை இது காட்டுகிறது (13), உச்சநீதிமன்றம் அரசியல் அழுத்தங்களுக்குப் பணிந்துவிட்டது (12) ஆகியவை பிற முக்கியப் பதிவுகள்.*

***(6) வழக்கின் இறுதி முடிவு:*** *உயர்/உச்சநீதிமன்ற அப்பீல்களுக்குப் பிறகு, இறுதியாக இந்த வழக்கின் கதி குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களில் முக்கியமானவை: வழக்கு தள்ளுபடியாகும், ஜெயலலிதா விடுதலையாகி, மீண்டும் முதல்வராவார் - 30, சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தண்டனை உறுதி செய்யப்படும் - 26, தண்டனை குறைக்கப்படும் - 23, முடிவில்லாமல் வருடக் கணக்கில் வழக்கு இழுத்தடிக்கப்படும் - 12.*

***(7) அதிமுக அரசின் செயல்பாடுகள் குறித்த கணிப்பு:***

| | சிறப்பு | பரவாயில்லை | மோசம் |
|---|---|---|---|
| சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பது | 16 | 29 | 49 |
| நலத்திட்டங்களின் செயலாக்கம் | 17 | 28 | 40 |
| விலைவாசியைக் கட்டுப்படுத்துவது | 26 | 16 | 42 |
| ஒழுங்கான ரேஷன் விநியோகம் | 12 | 30 | 43 |
| மின்தடையை நீக்கும் நடவடிக்கைகள் | 15 | 27 | 46 |
| கிரானைட் ஊழல் மீதான நடவடிக்கைகள் | 10 | 14 | 48 |
| அரசுத்துறைகளில் லஞ்சம்/ஊழலைக் கட்டுப்படுத்துதல் | 4 | 11 | 73 |
| குடிப் பிரச்சனையைக் கையாளும் விதம் | 3 | 8 | 54 |
| மணல் கொள்ளையைத் தடுக்கும் நடவடிக்கைகள் | 3 | 12 | 51 |
| அண்டை மாநிலங்களுடன் நதிநீர்ப் பங்கீடு அணுகுமுறை | 28 | 21 | 32 |

*(8) அதிமுக அரசின் ஒட்டுமொத்தச் செயல்திறன்:*

| | சிறப்பு | பரவாயில்லை | மோசம் |
|---|---|---|---|
| ஜெயலலிதா முதல்வராக இருந்தவரை | 58 | 29 | 6 |
| பன்னீர்செல்வம் முதல்வரானபின் | 29 | 22 | 35 |

தமிழக அரசின் தற்போதைய செயல்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் பரவலான அதிருப்தி நிலவுவதை மேலுள்ள இரு அட்டவணைகளும் வெளிப்படுத்துகின்றன.

***(9) தண்டனையின் பயன்:*** அடுத்த பத்தாண்டுகள் ஜெயலலிதா முதல்வராக முடியாது என்ற தற்போதைய நிலை தொடரும் பட்சத்தில், தமிழகத் தேர்தல் களத்தில் ஜெயலலிதாமீது அனுதாபம் அதிகமாகி, அது அதிமுக-வின் வெற்றிக்கு வழிகோலும் என்பது பெரும்பான்மைக் கருத்து.

| | |
|---|---|
| ஜெயலலிதாமீது அனுதாபம் அதிகமாகி, அதிமுக வெற்றிபெறும் | 31 |
| அதிமுக-வுக்குச் சரிவு ஏற்படும் | 24 |
| பெரிய மாற்றம் எதுவும் இருக்காது | 25 |
| ஜெயலலிதா சட்டரீதியாக விரைவில் விடுதலையாகிவிடுவார் என்பதால் இந்தக் கேள்விக்கே இடமில்லை | 16 |

***(10) முன்கூட்டியே தேர்தலா?*** தற்போதுள்ள அரசியல் சூழலை வைத்துப் பார்க்கையில், தமிழக சட்டமன்றத்திற்கு முன்கூட்டியே தேர்தல் வருவதற்கான சாத்தியமுள்ளதாக வலுவான கருத்து நிலவுகிறது.

| | |
|---|---|
| சொத்துக்குவிப்பு வழக்கின் இறுதி முடிவுக்கேற்ப முன்கூட்டியே வரலாம் | 38 |
| 2016 ஏப்ரலில்தான் வரும் | 32 |
| இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது | 27 |

***(11) யாருக்கு லாபம்?*** தமிழகச் சட்டமன்றத்திற்கு முன்கூட்டியே தேர்தல் வரும் பட்சத்தில் அது யாருக்குச் சாதகமாக இருக்கும் என்ற கணிப்பில் அதிமுக முதலிடம் பெறுகிறது.

| | |
|---|---|
| அதிமுக-வுக்குச் சாதகம் | 44 |
| திமுக-வுக்கு | 17 |
| பாஜக-வுக்கு | 12 |
| கூட்டணியைப் பொருத்து | 11 |

***(12) நடிகர்களின் அரசியல் தேவை:*** இன்றைய அரசியல் சூழலில் நடிகர்கள் அரசியலுக்கு வருவதற்கான தேவை இருக்கிறதா என்ற கேள்விக்கு, தேவை இல்லை என்ற பதில் அழுத்தமாகப் பதிவாகியுள்ளது.

| | |
|---|---|
| அப்படியொரு தேவை இருப்பதாகத் தெரியவில்லை | 71 |
| நிச்சயம் தேவை இருக்கிறது | 18 |
| தேவை இருந்தாலும் இல்லாவிட்டாலும் வருவதில் தப்பில்லை | 6 |

***(13) தனிக் கட்சியா?*** இன்றைய முன்னணி நடிகர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கையில் ரஜினி மற்றும் விஜய் ஆகிய இருவரும் அரசியலுக்கு வரக்கூடும் என்பது சிறுபான்மை எதிர்பார்ப்பு. அப்படி வரும் பட்சத்தில், அவர்கள் தனிக்கட்சி தொடங்கக் கூடும் என்பது சிலரது யூகம்.

| **அரசியல் நுழைவு:** | | **தனிக்கட்சி தொடக்கம்:** | |
|---|---|---|---|
| ரஜினி | 17 | ரஜினி | 8 |
| விஜய் | 21 | விஜய் | 6 |

***(14) நடிகர்களுக்கு ஆதரவு:*** நடிகர்கள் அரசியலில் நுழையும் வேளையில் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்க மிகச் சிலரே தயாராயுள்ளனர்.

| **தங்கள் தனிப்பட்ட ஆதரவு:** | | **மக்கள் ஆதரவளிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு:** | |
|---|---|---|---|
| ரஜினிக்கு | 4 | ரஜினிக்கு | 3 |
| விஜய்க்கு | 2 | விஜய்க்கு | 5 |

மேற்கண்டபடி மக்கள் மனநிலையை வைத்துப் பார்க்கையில், ஊடகங்களின் பரபரப்புக்கு அப்பால், தமிழக அரசியல் களத்தில் எந்த நடிகரும் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் சூழல் தற்போது நிலவவில்லை.

*(15) வாசன் விலகல்:* காங்கிரஸிலிருந்து வாசன் பிரிந்து மீண்டும் தனிக்கட்சி தொடங்கியுள்ளதால் தமிழக அரசியலில் பெரிய அளவில் தாக்கம் இருக்காது என்பதே பெரும்பான்மைக் கருத்து.

| | |
|---|---|
| தமிழக அரசியலில் மிகப் பெரிய தாக்கம் | 6 |
| தாக்கம் இருக்கலாம், ஆனால் பழைய தமாகா அளவுக்கு இருக்காது | 10 |
| காங்கிரஸுக்கு மட்டும் பாதிப்பு இருக்கும் | 10 |
| எந்தப் பாதிப்பும் இருக்காது | 39 |

கணிப்பில் பங்கேற்றோரில் 30 சதவீதத்தினருக்கு இந்த நிகழ்வு குறித்து சரிவரத் தெரியவில்லை என்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

*(16) யாருக்கு வாக்கு?* தற்போதைய அரசியல் பின்னணியில், தமிழக அளவில் இன்று வாக்களிப்பதாக இருந்தால், வாக்குகள் பதிவாகும் விதம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அதிமுக | 43 | திமுக | 26 | பாஜக | 9 |
| தேமுதிக | 3 | பாமக | 2 | காங்கிரஸ் | 1 |
| இடதுசாரிகள் | 1 | விசிக | 1 | யாருக்குமில்லை | 5 |

கடந்த கணிப்புகளோடு ஒப்பிடுகையில், பாஜக-வின் வாக்கு தற்போது 9 சதவீதமாக உயர்ந்து மூன்றாவது பெரிய கட்சி என்ற இடத்தைப் பிடித்துள்ளது.

## (17) பாஜக அரசின் செயல்பாடுகள் குறித்த கணிப்பு

| | சிறப்பு | பரவாயில்லை | மோசம் |
|---|---|---|---|
| தூய்மை இந்தியா திட்டம் | 36 | 27 | 16 |
| கருப்பு பண விவகாரத்தைக் கையாளும் விதம் | 16 | 23 | 43 |
| வெளிநாடுவாழ் இந்தியரை ஈர்க்கும் 'Make-in-India' | 21 | 36 | 26 |
| சிறுபான்மையினர் நலன் காத்தல் | 15 | 24 | 32 |
| பாகிஸ்தான், சீனாவுடன் நல்லுறவு பேணல் | 16 | 21 | 42 |
| பாஜக ஆளாத மாநிலங்களை நடத்தும் விதம் | 7 | 22 | 37 |
| ஆட்சியில் RSS குறுக்கீடுகளைக் கையாளும் விதம் | 6 | 19 | 45 |
| இந்திக்குத் தரப்படும் மிகை முக்கியத்துவம் | 10 | 17 | 52 |
| விலைவாசியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் | 21 | 25 | 40 |
| இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இந்திய நிலைப்பாடு | 2 | 15 | 68 |
| தமிழக மீனவர் உரிமை / நலன் காப்பதில் ஈடுபாடு | 22 | 35 | 36 |
| வேலைவாய்ப்பைப் பெருக்கும் நடவடிக்கைகள் | 12 | 37 | 34 |

மத்தியில் மோடி தலைமையிலான பாஜக அரசின் செயல்பாடுகளைப் பொதுவாக விமர்சன நோக்கில் பார்க்கும் போக்கே தமிழக மக்களிடம் மேலோங்கியுள்ளது என்றாலும், சில புதுமையான திட்டங்கள் / சரியான நேரத்தில் எடுக்கப்படும் சில நடவடிக்கைகள் மோடி அரசுக்கு ஆதரவான திசையில் மக்களை ஈர்க்கத் தொடங்கியுள்ளதும் புலப்படுகிறது.

*(18) அமைச்சரின் செயல்பாடு:* தமிழகத்திலிருந்து மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள ஒரே அமைச்சர் என்ற சிறப்புடைய பொன். ராதாகிருஷ்ணன் தமிழக நலனில் காட்டும் அக்கறை குறித்துப் பரவலான திருப்தி நிலவுகிறது.

| | |
|---|---|
| தமிழக நலனில் காட்டும் அக்கறை பாராட்டுக்குரியது | 51 |
| பரவாயில்லை என்றாலும் மத்திய அரசிடம் இன்னும் கொஞ்சம் அழுத்தமாக வலியுறுத்தலாம் | 22 |
| அவருக்கு அக்கறை இருந்தாலும் அதிகாரம் குறைவு என்பதால், பெரிதாக எதையும் எதிர்பார்க்க முடியாது | 13 |

# திருவரங்கம் இடைத்தேர்தல் களம்
# தொகுதி அளவில் ஒரு முன்னோட்டம்

## *பங்கேற்றோர் பின்னணி*

தேர்தல் இன்னும் அறிவிக்கப்படவில்லை எனினும், திருவரங்கம் தொகுதி மக்கள் அதற்குத் தயாராகி வருவதைத் தொகுதி முழுக்கக் காண முடிகிறது. ஆய்வில் பங்கேற்றோரில் ஆண்கள் 80, மீதி பெண்கள். *வயதுரீதியாக,* வயது 20 வரை - 4, வயது 21 முதல் 30 வரை - 21, வயது 31 முதல் 45 வரை - 38, வயது 46 முதல் 60 வரை - 26 (மீதி - வயது 60-க்கு மேல்). *கல்வியைப்* பொருத்த மட்டில், பெரும்பாலோர் (62) வகுப்பு 6 முதல் 12 வரையும், நான்கில் ஒருவர் (24) கல்லூரி அல்லது தொழிற்கல்வியும் படித்துள்ளவர்கள் (மீதி - படிக்காதவர்கள் மற்றும் ஆரம்பக் கல்விவரை படித்துள்ளவர்கள்). *தொழில்ரீதியாக,* கணிசமான அளவினர் சிறிய அளவில் சொந்தத் தொழில் செய்வோர் (35) மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் (23). பிறரில்: இல்லத்தரசிகள் - 11, கூலி வேலை / விவசாயம் செய்வோர் - 10, அரசு ஊழியர் - 6, ஓய்வூதியம் பெறுவோர் - 5, மாணவர்கள் - 4. *சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 15, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 18, பிற்படுத்தப்பட்டோர் - 41, பிற (உயர்) சாதியினர் - 11, மீதி - தகவல்தர விரும்பாதவர்கள். *சார்ந்துள்ள கட்சிரீதியாக,* அதிமுக - 14, திமுக - 14, காங்கிரஸ் - 2, பாஜக - 2, இடதுசாரிகள் - 1 (மீதி - கட்சி சாராதவர்கள்). *மதரீதியாக,* மிகப்பெரும்பான்மையோர் (88) இந்துக்கள். இஸ்லாமியர் - 5, கிறித்தவர் - 2.

## *ஆய்வு முடிவுகள்*

***(19) உடனடித் தேவைகள்:*** திருவரங்கம் தொகுதியின் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகளாக முதல் அய்ந்து:

| | | | |
|---|---|---|---|
| குடிதண்ணீர் வசதி | 17 | சாலை/போக்குவரத்து வசதி | 16 |
| சாக்கடை/கழிப்பிட வசதி | 14 | முறையான ரேஷன் விநியோகம் | 5 |
| வெட்டு இல்லா மின்சாரம் | 5 | | |

***(20) ஒட்டுமொத்தச் செயல்பாடு:*** தொகுதியைப் பொருத்த மட்டில் அதிமுக அரசின் ஒட்டுமொத்தச் செயல்பாடு ஜெயலலிதா முதல்வராக இருந்தவரை சிறப்பாக இருந்ததாகப் பெரும்பான்மையோர் (73) தெரிவிக்கின்றனர் (மிகச் சிறப்பு - 31, சிறப்பு - 42). பன்னீர்செல்வம் முதல்வரானபின், தொகுதியில் அரசின் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றம் தென்படுகிறது.

| | சிறப்பு | பரவாயில்லை | மோசம் |
|---|---|---|---|
| ஜெயலலிதா முதல்வராக இருந்தவரை | 73 | 18 | 6 |
| பன்னீர்செல்வம் முதல்வரானபின் | 35 | 26 | 26 |

***(21) திட்டங்களின் கதி:*** எனினும், ஏற்கெனவே தொகுதியில் தொடங்கப்பட்டுள்ள திட்டங்கள் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்ற எதிர்பார்ப்பு பெருவாரியாக (63) வெளிப்படுகிறது. பிற பதில்கள்: நிறைவேறுவதில் தொய்வு ஏற்படும் - 20, நிறைவேற்றப்படாமல் போகக்கூடிய ஆபத்து உள்ளது - 7, கைவிடப்பட்டுவிடும் - 3.

***(22) இடைத்தேர்தல் யூகம்:*** கடந்த தேர்தலைப் போல (பலமுனைப்போட்டியில்) கட்சிகள் களமிறங்கினால், திருவரங்கம் இடைத்தேர்தல் முடிவுகள் யாருக்குச் சாதகமாக அமையும் என்ற யூகத்தில், ஏறத்தாழ நான்கில் மூன்று பங்கு ஆதரவுடன் அதிமுக முதலிடம் பெறுகிறது. அதிமுக - 74, திமுக - 9, தேமுதிக - 1 (மீதி - யூகிக்க முடியாதவர்கள் / தகவல்தர விரும்பாதவர்கள்).

***(23) பொது வேட்பாளர்?*** அனைத்து எதிர்க்கட்சிகளும் சேர்ந்து அதிமுக-வுக்கு எதிராக ஒரு பொது வேட்பாளரை நிறுத்தினால், அவர் வெற்றிபெறும் வாய்ப்புள்ளது என்பது நான்கில் ஒருவர் (25) கருத்தாக இருந்தாலும், அதைவிட ஏறத்தாழ மும்மடங்கு அதிகமானோர் (73) அதிமுக வேட்பாளருக்கே அந்த வாய்ப்பு எனக் கருதுகின்றனர்.

***(24) இன்று வாக்களிப்பதாக இருந்தால்...*** யூகங்கள் ஒருபுறம் இருக்க, இன்று வாக்களிப்பதாக இருந்தால், பெரும்பாலோர் (56) வாக்கு அதிமுக-வுக்குச் செல்கிறது. எனினும், முன்னர் கண்ட யூகத்தோடு ஒப்பிடுகையில் நேரடி வாக்கின் அளவு மிகவும் குறைந்திருப்பது கவனத்திற்குரியது. இதற்கு

நேரெதிராக, மிகக் குறைந்த அளவினரே திமுக வெற்றிபெறும் என யூகித்தாலும், நேரடி வாக்கு என வரும்போது திமுக-வுக்கு குறிப்பிடத்தக்க அளவு (22) ஆதரவு வெளிப்படுகிறது. பிற கட்சிகளில், பாஜக - 3, காங்கிரஸ் - 1, தேமுதிக - 1, யாருக்குமில்லை (nota) - 4.

| | **வாக்கு** | **யூகம்** |
|---|---|---|
| அதிமுக | 56 | 74 |
| திமுக | 22 | 9 |

***(அ) பாலியல்ரீதியாக,*** ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் அதிமுக முன்னிலை வகித்தாலும் பெண்களிடம் அக் கட்சிக்கு அதிக ஆதரவு வெளிப்படுகிறது. *ஆண்கள்:* அதிமுக 56 / திமுக 23. *பெண்கள்:* அதிமுக 75 / திமுக 21.

***(ஆ) வயதுரீதியாக,*** அனைத்து வயதினரின் ஏகோபித்த ஆதரவுடன் அதிமுக முன்னிலை வகிக்க, அதிக வாக்கு வேறுபாட்டுடன் திமுக-இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. *வயது 21-30* பிரிவினர் மத்தியில் மட்டும் திமுக-அதிமுக இடைவெளி சற்று குறுகியுள்ளது (திமுக - 40, அதிமுக - 53).

***(இ) சாதிரீதியாக,*** அனைத்து சமுதாயத்திலும் வலுவான ஆதரவுடன் அதிமுக முதலிடத்தில் விளங்குகிறது. பிராமணர்களின் ஆதரவு ஏறத்தாழ முழுமையாகவே (92) அதிமுக-வுக்குச் செல்கிறது.

***(ஈ) தொழில்ரீதியாக,*** அனைத்துப் பிரிவினரிடமும் அதிமுக பெரும்பான்மை ஆதரவைப் பெறுகிறது.

***(உ) கல்விரீதியாக,*** படிக்காதவர்களின் ஆதரவு திமுக, அதிமுக-வுக்கு சமஅளவில் பிரிகிறது (திமுக - 50, அதிமுக - 50). பிற அனைத்துத் தரப்பினரிடையிலும் அதிமுக-வே கோலோச்சுகிறது.

***(ஊ) மதரீதியாக,*** இந்துக்கள் மத்தியில் அதிமுக-வும் கிறித்தவர் மற்றும் இஸ்லாமியர் மத்தியில் திமுக-வும் அதிக செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றன.

| | **அதிமுக** | **திமுக** |
|---|---|---|
| இந்துக்கள் | 64 | 20 |
| இஸ்லாமியர் | 29 | 57 |
| கிறித்தவர் | 20 | 80 |

***(எ) இறுதியாக...*** திருவரங்கம் தொகுதி வாக்காளரின் எண்ணவோட்டங்களை ஒட்டுமொத்தமாகக் கணிக்கும்போது, தற்போது நிலவும் அரசியல் சூழலில் இடைத்தேர்தல் வரும் பட்சத்தில் அதிமுக-வின் வெற்றி தவிர்க்க முடியாதது என்ற முடிவுக்கு இட்டுச் செல்வதாக இன்றைய கள நிலவரம் உள்ளது.

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர், மக்கள் ஆய்வகம்
22 நவம்பர் 2014

*கவனத்திற்கு:* (1) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (2) கேள்விக்கான பதில்களில் முக்கியமானவை மட்டும் பட்டியலிடப் பட்டுள்ளதால், விழுக்காடுகளின் கூட்டுத்தொகை 100-ஐ விடக் குறைவாக இருக்கலாம். (3) சதவீதங்களின் பின்னங்கள் எல்லாம் முழு எண்களாகத் திருத்தப்பட்டுள்ளன.

**நன்றி**

*தொடர்புக்கு:*

மக்கள் ஆய்வகம்

122 வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை 600 094

கிராமிய மக்கள் ஆய்வு & பயிற்சி மையம்

பளியன்குடி விலக்கு, மேலக்கூடலூர் கிராமம், லோயர் கேம்ப், தேனி மாவட்டம்

செல்: 8870341318 (தலைமை அலுவலகம்) / 8870431319 (களப் பணியகம்)

மின்னஞ்சல்: peoplestudies@gmail.com

---

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே"

## நீரோட்டம்:
### அரசியல் பண்பாடும் பண்பாட்டு அரசியலும்

### *கள ஆய்வுகளில் 21-ஆம் நூற்றாண்டுத் தமிழகம்*

*வெறுமனே தேர்தலை முன்வைத்த கணிப்புகளுக்கு மாறாக, தேர்தல் பின்புலத்தில் மக்களை மையப்படுத்திய, நேர்மையான, நடுநிலையான, நம்பகமான, வெளிப்படையான, துணிச்சலான களஆய்வுகளாக இருப்பதால், வரலாறு வரைவுக்கான மூல ஆவணங்களில் நீரோட்டம் என்ற இந்த நூலும் ஒன்றாகத் திகழ்கிறது.*

*இந்த நூற்றாண்டில் இதுவரை தமிழகம் / தமிழர்கள் பயின்று வந்துள்ள பாதைகள், பார்வைகளின் திசைகள், உந்து விசைகள், எதிர்கொண்டுள்ள சவால்கள் / சவடால்கள், அவற்றின் பின் உறைந்துள்ள / சிதைந்துள்ள வரலாறுகள், பண்பாட்டு ஆணிவேர்கள் / எச்சங்கள், அரசியல் கணக்குகள் / பிணக்குகள், தேர்தல் சூத்திரங்கள் / சாத்திரங்கள், ஊடகச் சித்து விளையாட்டுக்கள்... என நிகழ்கால வரலாறு வரைவியலின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கே திரட்டித் தருகிறது.*

*ஆய்வாளர்கள், அரசியல் நோக்கர்கள், அரசியல்வாதிகள் தமிழகப் பண்பாடு-அரசியல் பரிணாமங்களை இன்னும் சற்று நெருங்கிச் சென்று புரிந்துகொள்ள மேலாய்வு செய்வதற்கான தரவுகளின் பெட்டகமாக விளங்குகிறது.*

*மக்கள் பெயரைச் சொல்லி / மக்களை அணுகி மேற்கொள்ளப்படும் ஆய்வு எத்தகையதாக இருந்தாலும் அந்த ஆய்வின் முடிவுகளை அறிந்து கொள்ளும் உரிமை ஆய்வுசெய்யப் பயன்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்டு. அவ்வாறே, வெகுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க விதத்தில் ஆய்வுகள் குறித்த விவரங்களை வெளிப்படையாக வைத்திருக்க வேண்டிய கடமை ஆய்வாளருக்கு உண்டு. இத்தகைய கருத்தியல் பின்னணியில், "மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கைவாக்கை மெய்ப்பிக்கும் மற்றொரு முயற்சி நீரோட்டம்.*

*ஆசிரியர்:* ***ச.ராஜநாயகம்*** / *வெளியீடு:* ***மக்கள் ஆய்வகம்*** / ISBN: 978-81-910217-9-0

## POPULAR CINEMA AND POLITICS IN SOUTH INDIA
### REIMAGINING MGR AND RAJINIKANTH

This work breaks new ground in the understanding of South Indian cinema and politics. Through incisive analysis and original concepts it illustrates the private, public and cinematic personas of MGR and Rajinikanth. It challenges the popular and scholarly myths surrounding them and shows the constant negotiation of their on-screen and off-screen identities. The book revisits the entire political history of post-Independent Tamil Nadu through its cinema, and presents a refreshing psycho-political and cultural map of contemporary South India. Replete with illustrative diagrams and graphs that lay bare the tropes of South Indian films, this work will be a major intervention in the understanding of Indian cinema.

This absorbing volume will be an important read for scholars, teachers and students of film studies, culture and media studies, and politics, especially those interested in South India.

***Author:*** **S. Rajanayagam** / ***Publisher:*** **Routledge** / ***ISBN:*** **978-1-13-882203-0**
*Visit:* http://www.routledge.com/books/details/9781138822030